பாடம் 7

பெப்ரவரி 8-14

# சிங்கக்கெபியிலிருந்து தூதனுடைய கெபிக்கு



## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *தானி 6; 1சாமு 18:6-9; மத் 6:6; அப் 5:27-32; மாற்கு 6:14-29; எபி 11:35-38.*

**மனன வசனம்:** அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் ராஜ்யத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள்; ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும் குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது; அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை. தானியேல் 6:4.

பாபிலோனை மேதிய பெர்சியா வீழ்த்திய பிறகு, மேதியனாகிய தரியு ராஜா தானியேலை ஞானமுள்ளவனென்று கண்டு, புதிய அரசில் பதவிகொடுக்கிறான். அரசாங்கப் பதவியை அந்த முதிய தீர்க்கதரிசி உண்மையோடு செய்ததால், மேதிய-பெர்சிய அரசாங்கத்தின் பிரதான நிர்வாகியாக அந்த ராஜா அவனை நியமிக்கிறான்.

ஆனால், முதல் பாவம் என்றழைக்கப்படும் பொறாமை அவனை விட்டுவைக்கவில்லை. தானியேல் மேதிய பெர்சிய அரசாங்கக் கடமைகளில் மட்டுமல்ல, முக்கியமாக தன் தேவனுக்கும் உண்மையுள்ளவராக இருந்தான். தேவனுக்கு அவன் உண்மையாக இருந்ததுதான், மற்ற அனைத்திலும் அவனை உண்மையுள்ளவனாக்கியது.

தானியேலுக்கு உண்டான உபத்திரவமானது, முடிவுகால தேவ மக்களுக்கு உண்டாகும் உபத்திரவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. தேவமக்கள் பாடுகளிலும் உபத்திரவத்திலிமிருந்து விலக்கப்படுவார்களென அந்தச் சம்பவம் சொல்லவில்லை. தீமையுடனான போராட்டத்தில் நன்மை இறுதியில் வெற்றிபெறுமென்றும், இறுதியில் தேவன் தம் மக்களை நீதிமான்களாக்குவாரென்றும் அது காட்டுகிறது.

*2020, பெப்ரவரி 15 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# பொறாமை கொண்டஆத்துமாக்கள்

பரிபூரண சூழலுள்ள பரலோகத்திலும்கூட கிறிஸ்துவின்மேல் லூசிபர் பொறாமைகொண்டான். 'இயேசு கிறிஸ்துமேல் லூசிபர் பொறாமை கொண்டான். ஆனால், இயேசு மகத்துவமும் உன்னத அதிகாரமும் உடையவரென்றும், ஆளுகைசெய்ய உரிமையுள்ளவரென்றும் தூதர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அவரைப் பணிந்தபோது, அவனும் பணிந்தான்; ஆனால் அவன் உள்ளத்தில் பொறாமையும் வெறுப்பும் நிறைந்திருந்தன.' - *SR,* பக். 14. பொறாமை ஆபத்தான ஓர் உணர்வு; பத்துக்கற்பனைகளில் கொலைசெய்யாதே, களவுசெய்யாதே என்கிற கற்பனைகளுடன் சேர்த்து, இச்சியாதே என்கிற கற்பனையும் சொல்லப்படுகிறது. யாத் 20:17.

**கேள்வி: ஆதி 37:11; 1சாமு 18:6-9 ஆகிய வசனங்களுடன் சேர்த்து தானி 6:1-5ஐ வாசியுங்கள். இந்தச் சம்பவங்களில் பொறாமை விளையாடிய விளையாட்டு என்ன?**

தானியேலின் நிர்வாகத் திறமைகள் ராஜாவைப் பிரமிக்கச்செய்தாலும்கூட பிற அதிகாரிகளின் பொறாமையைத் தூண்டின. அவன்மேல் ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தி, அவனை பதவி விலக்கலாமென சதித்திட்டம் போட்டார்கள். ஆனால் எவ்வளவுதான் தேடியும், தானியேலின் நிர்வாகத்தில் எந்தக் குறையும் கண்டுபிடிக்க முடியவில்லை. 'அவன் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை.' தானி 6:4. 'உண்மையள்ள' என்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள அரமெய்க் வார்த்தையை 'நம்பிக்கைக்குப் பாத்திரமான' என்றும் மொழிபெயர்க்கலாம்.

தானியேல் குற்றமற்றவன்; அவன்மேல் குற்றஞ்சுமத்துவதற்கு அதிகாரிகளால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. தானியேல் தன் தேவனுக்கு உண்மையாக இருந்ததையும், அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததையும் அவர்கள் கண்டார்கள். எனவே தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா, ராஜ்யத்தின் கட்டளைகளுக்குக்கீழ்ப்படிய வேண்டுமா என்கிற இரண்டாங்கெட்ட நிலையை உருவாக்குவதே தானியேலின்மேல் குற்றங்கண்டுபிடிப்பதற்கான வழியென்பதை உணர்ந்தார்கள். தானியேல் தன் தேவனுடைய கட்டளைகளுக்குத்தான் முதலிடம்கொடுப்பான் என்பதை அந்த அதிகாரிகள் சந்தேகத்திற்கிடமின்றி அறிந்திருந்தார்கள். தானியேலின் உண்மைத் தன்மைக்கு எப்படிப்பட்ட ஒரு சாட்சி இது!

பொறாமை எப்படிப்பட்ட போராட்டங்களை எல்லாம் உங்கள்முன் வைத்திருக்கிறது? அவற்றை எவ்வாறு கையாண்டீர்கள்? பொறாமை எவ்வாறு ஒரு மோசமான, முடக்குகிற ஆவிக்குரிய கேடாக இருக்கிறது?

# தானியேலுக்கு எதிரான சதித்திட்டம்

**கேள்வி: இந்தக் கட்டளைக்கு பின்னாலிருந்த சதித்திட்டம் என்ன? தானி 6:6-9. ராஜாவின் தற்பெருமையை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டார்கள்?**

---

சீக்கிரமே ரத்துசெய்யப்படவிருந்த கட்டளை அது. சமீபத்தில்தான் அந்த ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது; அந்த அரசியல் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, அதிகாரிகள் விரித்த வலையில் சிக்கினான் தரியு. அதிகாரத்தை பலருக்கும் பிரித்துக்கொடுத்து, திறமையாக நிர்வாகம் செய்வதற்காக 120 தேசாதிபதிகளை ராஜா நியமித்திருந்தான். அதில் இடர்பாடுகளும் இருந்தன. நாளடைவில் ஒரு தேசாதிபதி செல்வாக்கு பெற்றால், அவன் கலகமுண்டாக்கி, ராஜ்யத்தைப் பிரிக்க முடியும். எனவே எல்லாரும் 30 நாட்களுக்கு ராஜாவிடம்தான் முறையிடவேண்டும் என்பது ராஜாமேல் மெய்ப்பற்றை வளர்ப்பதற்கான நல்ல வியூகமாக இருந்தது; அதனால் ராஜ்யம் பிளவுபடாமலும் தடுக்க முடியும். 'சகல' பிரதானிகள், தேசாதிபதிகள், பிரபுக்கள், மந்திரிமார்கள், தலைவர்களின் ஆதரவால் அந்த யோசனை பிறந்ததாக ராஜாவை நம்ப வைக்கிறார்கள்; அது உண்மையல்ல, ஏனென்றால், தானியேலிடம் கேட்கவில்லை. மேலும், தன்னை ஒரு கடவுள்போல நடத்தின செயல், ராஜாவுக்குப் பிடித்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

பெர்சிய ராஜாக்கள் தங்களை தெய்வங்களாகச் சொல்லிக்கொண்டதாக ஆதாரமில்லை. எனவே தேவர்களின் பிரதிநிதி ராஜாமட்டுமே என்றுதான் அந்தக் கட்டளை போடப்பட்டிருக்கலாம். அதாவது, ராஜா மூலம் தேவர்களிடம் விண்ணப்பிக்குமாறு சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அந்தக் கோரிக்கையின் பின்னாலிருந்த நோக்கங்களை ராஜா அறியவில்லை. எனவே, சதித்திட்டத்தை முறியடிப்பதற்காக வைக்கப்பட்ட அந்தத் திட்டம், தானியேலை சிக்கவைப்பதற்கான சதித்திட்டம்.

இந்தக் கட்டளையின் இரண்டு அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. முதலாவது, சட்டத்தை மீறினால் சிங்கக்கெபியில் எறியப்படுகிற தண்டனை. இதுபோன்ற தண்டனை வேறு எங்கும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை; எனவே தானியேலுக்கென்று அவனுடைய எதிரிகள் உருவாக்கியதாக இருக்கவேண்டும். பண்டைய மத்திய கிழக்கு மன்னர்கள் சிங்கங்களை கூண்டுகளில் வளர்த்தார்கள். சில தருணங்களில் வேட்டையாடுவதற்காகத் திறந்துவிடுவார்கள். எனவே ராஜாவின் கட்டளையை மீறுகிறவரைக் குதறிப்போட சிங்கங்களுக்கு பஞ்சமிருக்கவில்லை. இரண்டாவது, அந்தக் கட்டளையை மாற்றமுடியாது. 'மேதிய பெர்சியர்களின் தேசச்சட்டம்' மாற்றப்படமுடியாதது என்று எஸ்தர் 1:19; எஸ்தர் 8:8இலும் சொல்லப்படுகிறது. ஒரு சமயம் மூன்றாம் தரியு மன்னன் (தானியேலில் சொல்லப்படும் தரியு அல்ல), குற்றஞ் செய்யாத ஒருவனுக்கு மரணதண்டனை விதித்து, அதை திரும்பப் பெற விரும்பியும் முடியாமல் போனதாக டியோடரஸ் ஸிகுலஸ் என்கிற முற்கால வரலாற்றாசிரியர் கூறுகிறார்.

# தானியேலின் ஜெபம்

*‘நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப்பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.’ மத்தேயு 6:6.*

**கேள்வி: தானியேல் ஏன் யாரும் பார்க்கமுடியாத இடத்தில் போய், அமைதியாக ஜெபம் பண்ணவில்லை? தானி 6:10.**

தானியேல் அரசாங்கத்தில் அனுபவம்வாய்ந்த அதிகாரி; அதைவிட அவர் தேவனுடைய ஊழியர். ராஜாவின் கட்டளையில் சம்பந்தப்பட்டிருந்த விஷயத்தை அந்த ராஜ்யத்திலேயே அவர் மட்டுமே அறியக்கூடிய நிலையில் இருந்தார். அந்தக் கட்டளையால் ராஜ்யத்தில் ஒற்றுமையை நிலைநாட்ட தரியு நினைத்தான்; ஆனால் சதிகாரர்கள் தானியேலை ஒழிப்பதற்கான வியூகமாக அதைப் பயன்படுத்தினார்கள்.

தேவனுக்கும் தீய வல்லமைகளுக்கும் இடையேயான அனைத்துலகப் போராட்டம்தான் அந்த சதித்திட்டத்தின் உண்மையான காரணங்களாக இருந்தன. அந்தச் சமயத்தில் (கி.பி.539), தானி 7லும் (கி.பி.553), 8லும் (கி.பி.551) உள்ள தரிசனங்கள் தானியேலுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தன. எனவே அந்த அரசக் கட்டளை வெறும் மனித அரசியல் விளையாட்டல்ல, அனைத்துலகப் போராட்டத்தின் ஒரு பகுதி என்பதை தானியேல் புரிந்துகொண்டான். அந்தத் தரிசனத்தில் மனுஷகுமாரன் ராஜ்யத்தை உன்னதமானவருடைய ஜனங்களுக்குக் கொடுப்பதாகவும், அந்தத் தரிசனத்திற்கு விளக்கம் சொல்லி தூதன் ஒருவன் தன்னைத் தேற்றியதாகயும் தானியேல் கண்டிருந்ததால் (தானி 7), அது அப்போது எழுந்திருந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு அவருக்கு தைரியத்தைக் கொடுத்திருக்கும். நேபுகாத்நேச்சாருடைய கட்டளையை தைரியமாகச் சந்தித்த தன் நண்பர்களின் அனுபவத்தையும் அவர் யோசித்திருக்கலாம். தானியேல் 3.

எனவே, தினமும் மூன்று வேளை ஜெபிக்கிற தன்னுடைய வழக்கத்தின்படி எருசலேமைநோக்கி ஜெபிக்கிறான். எந்த மனிதனிடமும் அல்லது தெய்வத்திடமும் விண்ணப்பிக்க தடையிருந்தாலும் அந்த 30 நாட்களும் தன் ஜெபவாழ்க்கையை மறைப்பதற்கு தானியேல் முயலவில்லை. அரசக்கட்டளையை நிறைவேற்ற தேசாதிபதிகளும் பிற அதிகாரிகளும் கைகோர்த்திருந்தாலும், தானியேல் தனியாளாக எதிர்கொண்டான். ராஜாமேலும், மாற்றமுடியாத அவனுடைய கட்டளைமேலும் மெய்ப்பற்று வைப்பதைவிட தேவன்மேல் மெய்ப்பற்று வைப்பதே முக்கியமென ஜெபவாழ்க்கைமூலம் காண்பித்தான்.

மனிதர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியாதெனச் சொல்லும்போது, நாம் தேவனுடைய சித்தப்படித்தான் செய்கிறோம் என்பதை எவ்வாறு நிச்சயமாக அறியலாம்? அப் 5:27–32. தாங்கள் தவறென நினைத்த நம்பிக்கைகளுக்குக் கீழ்ப்படிவதைவிட இரத்தச்சாட்சியாக மரித்தவர்களை சிந்தித்துப் பாருங்கள்.

## சிங்கக்கெபியில்

**கேள்வி: தேவனுக்கு எவ்வளவு வல்லமையான உண்மையுள்ள ஒரு சாட்சியாக தானியேல் விளங்கினான் என்பதுபற்றி தானி 6:11-23 வசனங்கள் சொல்வது என்ன?**

கட்டளைக்கு நேர்மாறாக, தானியேல் தன் தேவனை நோக்கி ஜெபம் பண்ணினதை சதிகாரர்கள் கண்டார்கள். ராஜாவிடம் தானியேலைப் பற்றி, 'சிறைப்பிடிக்கப்பட்ட யூதேயாதேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன்' என்று இழிவாகச் சொல்லுகிறார்கள். தானி 6:13. சாம்ராஜ்யத்தில் பிரதானிகளில் ஒருவன், ராஜாவின் அபிமானிகளில் ஒருவன் அவர்களுடைய கண்களுக்கு ஒரு 'சிறைக்கைதியாகத்' தெரிந்தான். மேலும், 'உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக்கொடுத்த கட்டளையையும் மதியாமல்' என்று தானியேலை ராஜாவிடம் போட்டுக்கொடுக்கிறார்கள். கட்டளையில் கையெழுத்து வாங்கி, தன்னைச் சிக்கவைத்துவிட்டதை ராஜா புரிந்துகொண்டான். 'அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்குமட்டும் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தான்.' தானி 6:14. தீர்மானிக்கப்பட்ட தண்டனையிலிருந்து தானியேலை விடுவிப்பதற்கு அவனால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படி அந்தக் கட்டளையை மாற்றமுடியாது. தனக்கு விருப்பமில்லையானாலும் தானியேலை சிங்கக்கெபிக்குள் எறிய கட்டளையிடுகிறான். ஆனால் சில நம்பிக்கையான வார்த்தைகளை தரியு சொல்கிறான்; அது ஒரு ஜெபம்போல உள்ளது: 'நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார்.' தானி 6:16.

சிங்கங்களுடன் தானியேல் என்ன செய்துகொண்டிருந்தார் என்று வேதாகமத்தில் சொல்லப்படவில்லை; ஆனால், அவர் ஜெபித்துக்கொண்டிருந்திருக்கவேண்டும். தேவன் தம் தூதனை அனுப்பி, தானியேலைப் பாதுகாத்து, அவனுடைய விசுவாசத்தைக் கனப்படுத்துகிறார். காலையில், எந்தச் சேதமுமின்றி தானியேல் தன் அரசாங்கப் பணிகளைத் தொடர்கிறார். இந்தச் சம்பவம்பற்றி எலன் ஒய்ட் பின்வருமாறு சொன்னார்: 'தானியேலைச் சிங்கக்கெபியில் போடாதவாறு அவனுடைய எதிரிகளை தேவன் தடுக்கவில்லை; தீய தூதர்களும் துன்மார்க்கரும் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுமளவிற்குத் தேவன் அவர்களை அனுமதித்தார்; ஆனால், தம்முடைய தாசனின் விடுதலையை அதிக விசேஷித்ததாக்குவதும், நீதிக்கும் சத்தியத்திற்கும் எதிரானவர்களின் தோல்வியை முழுதளவில் உறுதிப்படுத்துவதுமே அங்கு முக்கியமானதாயிருந்தது.' – *PK*, பக். 543,544.

இந்தச் சம்பவம் தானியேலுக்கு சந்தோஷமான அனுபவமாக முடிந்தது. ஆனால் இதுபோல சந்தோஷமாக முடியாத சம்பவங்களை, வேதாகமத்தில்தானே பார்க்கிறோம். உதாரணமாக, மாற்கு **6:14–29.** அவற்றை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது?

**வியாழன்** பெப்ரவரி 13

# நியாயமென நிரூபணமாதல்

**கேள்வி: தேவனைப்பற்றி ராஜா சொன்ன சாட்சி என்ன? தானியேல் 6:24-28.**

---

தேவனை தரியு புகழ்கிறான். எல்லாவற்றிற்கும் மேலாக அவரே அதிகாரமுள்ளவரென உணர்கிறான். முந்தின அதிகாரங்களில் தேவனைப் புகழ்ந்து அல்லது அங்கீகரித்துச் சொல்லப்பட்ட வார்த்தைகளின் உச்சக்கட்ட புகழ்ச்சியாக இது இருக்கிறது. தானி 2:20-23; 3:28,29; தானி 4:1-3, 34-37. நேபுகாத்நேச்சார் போல தரியுவும், தானியேல் விடுவிக்கப்பட்டதற்காக தேவனைப் புகழ்கிறான். அதோடு அவன் நிற்கவில்லை; முன்பு தான் போட்ட கட்டளையை திரும்பப்பெற்று, யாவரும் 'தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டும்' என்று கட்டளையிடுகிறான். தானி 6:26.

தானியேல் அற்புதவிதமாக விடுவிக்கப்பட்டான்; அவனுடைய உண்மைத்தன்மைக்கு பலன் கிடைத்தது; தீமை தண்டிக்கப்பட்டது, தேவனுடைய கனமும் வல்லமையும் நிரூபணமாயின. உலகளாவிய அளவில் நடைபெறவிருக்கிற ஒரு போராட்டத்திற்கு ஒரு குட்டி உதாரணமாக இந்தச் சம்பவம் இருக்கிறது. அதாவது, தேவபிள்ளைகள் விடுவிக்கப்படுவார்கள். தீமை தண்டிக்கப்படும். அனைத்துலகிற்கும் முன்பாக தேவன் நியயாமுள்ளவரென நிரூபிக்கப்படுவார்.

**கேள்வி: தானி 6:24 சொல்லும் செய்தி துக்ககரமானதாக இருக்கிறது. அது ஏன்?**

---

குற்றஞ்செய்தவர்கள் தண்டிக்கப்பட்டது நியாயந்தான்; குற்றஞ் செய்யாத அவர்களுடைய மனைவிகளும் பிள்ளைகளும் ஏன் தண்டிக்கப்பட்டார்கள்? நியாயமற்றதாகத் தோன்றுகிற இந்தச் சம்பவத்திற்கு நாம் என்ன விளக்கம் சொல்லலாம்?

முதலாவது, ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட்டால், அவனோடு அவன் குடும்பமும் தண்டிக்கப்பட வேண்டுமென்பது பெர்சிய சட்டம். அதன்படி ராஜா தண்டித்தான். குடும்பத்தில் ஒரு நபர் குற்றஞ்செய்தால், ஒட்டுமொத்தக் குடும்பமும் அதற்கு உடந்தை என்பது பண்டைய நியதியாகும். அதற்காக இது சரியென்றாகிவிடாது. பெர்சிய சட்டத்தின்படி அந்தச் சம்பவம் நடைபெற்றது அவ்வளவுதான்.

இரண்டாவது, நிகழ்ந்த சம்பவத்தை வேதாகமம் அப்படியே சொல்கிறதே தவிர, அதை அங்கீகரிக்கவில்லை. பெற்றோரின் பாவத்திற்காக பிள்ளைகளுக்கு மரணதண்டனை கொடுப்பதை வேதாகமம் கண்டிப்பாகத் தடைசெய்கிறது. உபா 24:16.

---

இதுபோன்ற அநீதியான சம்பவங்கள் எவ்வளவோ நிகழ்கின்றன; 1கொரி 4:5 போன்ற வசனங்களிலிருந்து நாம் என்ன ஆறுதலைக் கண்டுகொள்ளலாம்? அந்த வசனம் சொல்வது என்ன? அதன் கருத்து எவ்வாறு முக்கியமானதாக இருக்கிறது?

# வெள்ளி பெப்ரவரி 14

## மேலும் படிக்க:

தானியேலின் விடுதலை பற்றி எபி 11 பதிவுசெய்துள்ளது. 'விசுவாச வீரர்களுடைய பட்டியலில்' இடம்பெற்றுள்ள தீர்க்கதரிசி, சிங்கங்களின் வாய்களை அடைத்ததாகச் சொல்லப்படுகிறது. எபி 11:33. தானியேலைப் போல மரணத்திலிருந்து தப்பித்தவர்கள் மட்டுமல்ல, விசுவாசத்திற்காகப் பாடுபட்டு தைரியமாக மரித்தவர்களும்கூட எபி 11ன் விசுவாசிகளின் பட்டியலில் வருகிறார்கள். சிலர் உயிரோடிருந்து சாட்சிபகரவும், சிலர் இரத்தசாட்சிகளாக மரிக்கவும் தேவன் அழைக்கிறார். தானியேலைப் போல எல்லாரும் விடுவிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்வதற்காக அந்தச் சம்பவம் எழுதப்படவில்லை; இயேசுவிலான விசுவாசத்திற்காக இரத்தசாட்சிகளாக மரிக்கிற ஏராளமான ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். ஆனால், தானியேல் விடுவிக்கப்பட்ட சம்பவமானது தேவன் அரசாளுகிறார் என்றும், பாவம் மற்றும் மரணத்தின் அதிகாரத்திலிருந்து தம் பிள்ளைகள் அனைவரையும் அவர் விடுவிப்பார் என்றும் காட்டுகிறது.

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *'மனிதன் கடவுளாக மாறத் திட்டமிடுகிறான் என்பதுதான் மனித யதார்த்த நிலையைப் புரிந்துகொள்வதற்கான அடிப்படை திட்டமாகும்' என்று ஜீன்-பால் சார்ட்டர் என்கிற ஃபிரெஞ்சுக்காரர் ஒரு சமயம் எழுதினார். ராஜா அந்தக் கண்ணியில் விழுந்ததற்கான காரணத்தைப் புரிந்துகொள்வதற்கு எவ்வாறு இதுவும் உதவுகிறது? நாம் வாழ்க்கையின் எந்தக் கட்டத்தில் இருந்தாலும், இதே போன்ற ஆசை எவ்வளவு நயவஞ்சகமான வழிகளில் வந்தாலும், அதில் நாம் விழுந்துவிடாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்? வேறு என்ன வழிகளிலெல்லாம் நாம் 'தேவனைப்போலாவதற்கு' வாய்ப்புள்ளது?*

2 *தேவனுக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் நாம் உண்மையுள்ளவர்களாக வாழவிரும்புவதை மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட சாட்சிகளால் காட்டுகிறோம்? உங்களைத் தெரிந்தவர்கள், உங்களைப் பார்க்கும்போது, 'வேலைக்கோ உயிருக்கோ ஆபத்துவந்தாலும்கூட தன் விசுவாசத்திலிருந்து பின்வாங்கமாட்டார்' என்று உங்களைக் குறித்துச் சொல்லமுடியுமா?*

3 *தேவன் தம்முடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு நபராக தானியேல் இருந்ததற்கு என்னென்ன காரணங்களைச் சொல்லலாம்? அதே போன்ற குணநலன்களை தேவனுடைய உதவியால் நீங்கள் எவ்வாறு வளர்த்துக் கொள்ளலாம்?*

4 *கட்டளை பிறந்ததும், தான் ஜெபிக்கும் முறையை மாற்றிக்கொண்டு, அதற்கு என்னென்ன காரணங்களைச் சொல்லி, தானியேல் நியாயப்படுத்தியிருக்கலாம்? அல்லது, அவ்வாறு சமரசமாகியிருப்பது ஆபத்தான ஒன்றாக மாறியிருக்குமா? மாறியிருக்குமானால், அது ஏன்?*